**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 410/2019**

**29.02.2024 பி.வா.சா.1. திரு. சமுத்திரம்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு1ம் வாதி வசந்தாவை தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி வசந்தா என்ன பரிகாரம் கோட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் சொத்து அவருடையது என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் வாதியின் பிராதை படித்துப்பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே நம்பர் 190/2. அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 11 செண்ட். தாவா சொத்து வெள்ளை கிராமம் பறக்குடி கழிவு நத்தம் புறம்போக்கு. அந்த சொத்து நத்தம் என்றால் கழிவு நத்தம் புறம்போக்கு. தாவா சொத்தின் நான்கு பக்க எல்கை தெரியும் வடக்கே வயல்காடு, கிழக்கே வயல் காடு, தெற்கு வீடுகள் உள்ளது, மேற்கிலும் வயல் காடு. தாவா சொத்தின் தற்போதைய டவுண் சர்வே எண்என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)